மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளில் இருந்து வெளிவரும் கழிவு நீராலும் அல்லது வெளியேற்றப்படுகின்ற புகையினாலும், நாட்டின் பல பகுதிகளில், சுகாதாரம் பாதிக்கப்படுவது, விவசாயம் பாதிக்கப்படுவது, கோடிக்கணக்கான மக்கள் பாதிக்கப்படுவது போன்ற நிலைமைகள் இருக்கின்றன. அதற்காகத் தொழிற்சாலைகளை மூடுவதை விட அதிலிருந்து வருகின்ற தண்ணீரை எப்படி சுத்தப்படுத்தி மீண்டும் அதை உபயோகிக்கலாம் என்பதைப் பார்க்க வேண்டும். அந்தப் புகையை எப்படி தடுக்க முடியும் என்பதை ஆராயவேண்டும். அதற்கான இயந்திரங்கள் எல்லாம் இருக்கின்றன. இதைப் பற்றி அரசு தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சிமெண்ட் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் எலக்ட்ரோஸ்டாடிக் ப்ரசிபிடேட்டர் இயங்கவில்லை என்று தெரிகிறது. மீண்டும் அதை இயக்குவதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.

(முற்பகல் 9-40)

திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு இளங்கோவன் அவர்கள் சொன்ன தொழிற்சாலை ஏ.சி.சி. தொழிற்சாலை. அது மதுக்கரையில் இருக்கிறது. நான் சொல்லும் தொழிற்சாலை கேரள எல்லையில் இருக்கிற காரணத்தால் நம்முடைய அரசு உரிய நடவடிக்கையை விரைவாக எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நடராசன் அவர்கள் குறிப்பிட்ட தொழிற்சாலை கேரளாவில் இருக்கிறது என்பது தெரியும். அப்படித் தெரிந்து தான் கேரள அரசுக்கு எழுதவேண்டும் என்று முன்பே சொன்னேன்.

கும்பகோணம் தாலுக்கா மருத்துவமனையை விரிவுபடுத்தல்.

32—(*வினா எண் 8289) திரு கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கும்பகோணத்திலுள்ள தாலுக்கா மருத்துவமனையை விரிவுபடுத்தும் கருத்துரு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (அ) மற்றும் (ஆ) ஆம். பத்து படுக்கைகள் கொண்ட அவசர சிகிச்சைப் பிரிவு 1986–87 ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கி கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடந்தை தாலுக்கா மருத்துவமனை என்பது கும்பகோணம் தாலுக்காவிற்கு மட்டும் அல்ல, திருவிடைமருதூர், பாபநாசம், வலங்கைமான் போன்ற தாலுக்காக்களுக்கும், திருச்சி மாவட்டம் அரியலூர் தாலுக்காவிற்கும் பயன்படுகிற ஒரு பெரிய மருத்துவமனையாக இருக்கிறது. கிட்டத்தட்ட 2 ஆயிரம் பேர் இதன் ஓ.பியில் கவனிக்கப்படுகிறார்கள். 250 படுக்கைகள் இருக்கின்றன. 600 பேர் அட்மிஷனாகி கீழே படுத்து இருக்கிறார்கள். அந்த அளவுக்கு ஒரு பெரிய மருத்துவமனையாக உள்ள இது மிகவும் சீர்கெட்டு இருக்கிறது, பழைய கட்டிடமாக 100 ஆண்டுகளுக்கு பட்ட கட்டிடமாக இருந்து கொண்டிருக்கிறது.

எதிர்காலத்தில் தஞ்சை மாவட்டம் பிரிக்கப்பட்டால் குடந்தை தாலுக்கா மருத்துவமனை மாவட்ட மருத்துவமனையாக ஆகக் கூடிய அளவுக்கு உள்ள மருத்துவமனை ஆகும். ஆகவே இப்போதிருந்தே அதை சீர் செய்து முன்னேற்றத்திற்கு வேண்டிய காரியங்களை அரசு செய்யத் துவங்கினால்தான் எதிர் காலத்தில் வசதியாக இருக்கும். 5.6 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. லேபர் வார்டு கூட சரியானபடி இல்லை குழந்தைகள் வார்டு இருப்பது இடிந்து விழும் நிலையில் இருக்கிறது. ஸ்பெஷல் வார்டு என்ற பெயரில் உள்ளதும் அதே போல் இடிந்து விழும் நிலையில் தான் இருக்கிறது. இவற்றை எல்லாம் சீர் செய்ய வேண்டும். அதோடு மருத்துவமனையில் லைட் மற்றும் ஃபேன் வசதி கூட இல்லை. தாலுக்கா மருத்துவமனையாக இருப்பதால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மருத்துவ மானியம் வரும் போது முழுமையாகப் பேசலாம். தற்போது கேள்வியாகக் கேளுங்கள்.

திரு கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியாகவே கேட்கிறேன். இரவு நேரத்தில் மருத்துவமனையில் சமூக விரோதிகள் நடவடிக்கை மிகவும் மோசமாக இருப்பதால் அரசு கவனித்து இந்த மருத்துவமனையை எந்த விதத்திலாவது முன்னுக்கு கொண்டுவந்து நல்ல முறையில் மக்கள் பயன்படுத்தும் அளவுக்கு மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விகும்பகோணம் தாலுக்கா மருத்துவமனை விரிவுபடுத்தப்படுமா என்பதுதான். அது விரிவுபடுத்தப் படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தவிர மற்ற விவரங்கள் என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல் அவர்கள் எழுதி அனுப்பினால் அரசு அதைப் பற்றி பரிசீலிக்கும்.

1986 நவம்பர் 17]

திரு க. நரசிம்மபல்லவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அனைத்து தாலுக்காக்களிலும் அரசு, தாலுக்கா மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டுள்ளதா? அப்படி என்றால் அவிநாசி, உத்திரமேரூர் போன்ற இடங்களில் இது வரை துவக்கப்படவில்லை. அங்கே துவக்கும் திட்டம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கும், தமிழக முதலமைச்சருக்கும், அப்போது இருந்த சுகாதார அமைச்சருக்கும் பல கடிதங்கள் எழுதியுள்ளேன். அது மட்டும் அல்ல, இந்த கேள்வியிலேயே ஒரு துணைக் கேள்வியாகக் கேட்கிறேன். சென்ற மாதம் சத்துணவு ஊழியர், ஒரு பெண்மணி—பாம்பு கடிக்கு மருந்து இல்லாமையால் கும்ப கோணத்தில் உள்ள மருத்துவமனையில் இறந்து போனார். அதேபோல் அங்கே மிகவும் தேவையான உயிர் காக்கும் மருந்துகள் கூட இல்லை. இதே நேரத்தில் இந்த மருத்துவ மனையை விரிவுபடுத்துவது என்றாலும் தற்போதுள்ள பிரச்சினை பாம்பு கடிக்கு மருந்து இல்லாததால் ஒரு உயிர் போய்விட்டது. அந்த அளவுக்கு தாலுக்கா மருத்துவமனை இருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். அதை நிவர்த்திக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது பத்திரிகையில் வந்து நானும் பார்த்தேன். அதைப்பற்றி அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது. தாலுக்கா மருத்துவமனைகளில் இது போன்ற பாம்பு கடிக்கு எல்லாம் மருந்து இருக்க வேண்டும் என்பதை ஒத்துக் கொள்கிறேன். அதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டு வருகின்றன.

திரு பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிற போது தாலுக்கா மருத்துவமனை விரிவுபடுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி என்றால் இந்த ஆண்டு விரிவு படுத்துவதற்கான நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதா? அதற்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டு இருக்கிறதா? வேலை எப்போது துவங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் கும்பகோணம் தாலுக்கா மருத்துவமனை பற்றிதான் கேள்வி. அதை 1986—87 ஆம் ஆண்டு 2-வது பிரிவில் எடுத்துக்கொள்ள ஒத்துக் கொணடு இருக்கிறார்கள் அதற்கான மதிப்பீடு தயார் செய்து கொண்டு வந்து அதை அனுமதிப்பதாக அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது.